DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.91-2021

DW - 1

| | | |
|---|---|---|
| Name | : | பாலசந்திரன் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 09.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பச்சுடையாம்பட்டி புதூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகார் யார் என்றால் எனது மகன் ஆவார். புகார் தாரர் எதிரி மீது பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரியை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் பார்த்துள்ளேன். எதிரியை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவர் உழவர் சந்தைக்கு வருவார் அந்த வகையில் பழக்கம். புகார்தாரர் எதிரி மீது எவ்வளவு தொகைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ரூ.7,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்தாரர் எதிரிக்கு எந்த இடத்தில் எப்போது பணம் கொடுத்தார் என்றால் கடந்த 2021ம் வருடம் 7வது மாதத்தில் எனது வீட்டில் வைத்து பணம் கொடுத்தார். தேதி நினைவில் இல்லை.

புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால்

நானும் எனது மனைவியும் இருந்தோம். அப்போது எதிரி புகார்தாரருக்கு ஆவணம் எதையும் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். என்ன ஆவணம் கொடுத்தார் என்றால் காசோலை கொடுத்தார். அது எந்த வங்கியின் காசோலை என்றால் State Bank காசோலை ஆகும். எந்த கிளை என்று தெரியவில்லை.

மேற்படி காசோலையில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்றால் ரூ.7,00,000/- என எழுதப்பட்டிருந்தது. அதில் எதிரி கையொப்பம் செய்து கொடுத்தார். மேற்படி தொகையை எதிரி புகார்தாரருக்கு எத்தனை நாட்களில் திருப்பி தருவதாக உறுதி அளித்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு என்னையும் எனது வீட்டையும் தெரியாது என்றாலும், புகார்தாரர் எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எதிரிக்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரி புகார்தாரருக்கு காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கு என்னையும், எனது மகனையும் நேரடியாக தெரியாது என்றாலும், இவ்வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> இல்லை

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**